## பொருள் எண்.1

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு காம்பெக்டர் லாறி எண்.TN-75-L-2565 ன் தகுதி சான்று புதுப்பித்தல் பணிகள் சரி செய்வதற்கு உத்தேச செலவு தொகைக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2013 நாள் 28.02.2019 ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள கீழ்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் வடசேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s.அக்சையா மோட்டார்ஸ் உண்ணாமலைக்கடை | மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், வடசேரி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1841/2013.எச்1

## தீர்மானம் எண்.2023 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.2

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தூய்மை பாரத இயக்கம் – திடக்கழிவு மேலாண்மை கொள்கை (SWM Policy) தயார் செய்து தேசிய பசுமை தீர்பாயத்தில் சமர்ப்பிக்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 05.03.2019 அன்று நடைபெறும் ஆய்வு கூட்டத்தில் SWM Policy 3 கலர் பிரதிகள் சமர்ப்பிக்கவும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகத்தில் 2 கலர் பிரதிகள் (SWM Policy மற்றும் Action Plan) தனித்தனியாக சமர்ப்பிக்கவும் மற்றும் sofy copy சமர்ப்பிக்கவும், தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் கேட்கப்படும் கூடுதல் பிரதிகளுக்கும் ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.25000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2042/2015/எச்1

## தீர்மானம் எண்.2024 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.3

இந்நகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கில் குப்பை கழிவுகள் மிக அதிகமாக சேர்ந்துள்ளதால் நெகிழிகளை தனியாக பிரிக்க இயலாத நிலையில் உள்ள கழிவுகளை உரக்கிடங்கில் JCB இயந்திரம் மூலம் ஒதுக்கி இடத்தை சீர் செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.100000/-க்கு மன்ற அனுமதி அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.998/2017/எச்1

## தீர்மானம் எண்.2025 அங்கீகரிக்கப்பட்டது

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில், குழித்துறை ஆறு கூட்டு குடிநீர் திட்டத்தில், ஆலஞ்சி முதல் குளச்சல் வரை பிரதான குழாய் பதித்தல் பணியினை ரூ.115.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் (மாலை முரசு) மற்றும் ஆங்கிலம் (Financila Express) ஆகிய பத்திரிக்கைகளின் 08.02.2019-ம் தேதிய பதிப்பில் பிரசுரம் செய்த வகையில் விளம்பர கட்டணம் ரூ.23,678/-ஐ வழங்க கேட்டு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை தற்போது நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், திட்ட நிதி பெறப்பட்ட பின்னர் மேற்படி தொகையினை பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.870-1/2018/எச்1

**தீர்மானம் எண்.2026 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில், தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டம் : 2018-19-ன் கீழ், ரூ.146.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள Bio-Mining திட்டப்பணி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் (தின செய்தி) மற்றும் ஆங்கிலம் (Buisness standard) பத்திரிக்கைகளின் 01.02.2019-ம் தேதிய பதிப்பில் பிரசுரம் செய்த வகையில் விளம்பர கட்டணம் ரூ.24,780/- ஐ வழங்க கேட்டு பட்டியல் எண்.6277 நாள் 02.02.2019, M/s.Bright Advertising, Chennai நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை தற்போது நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும், திட்ட நிதி பெறப்பட்ட பின்னர் விளம்பர கட்டணத்திற்கான தொகையினை பொது நிதிக்கு மாற்றம் செய்யவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566-2/2012/இ1

**தீர்மானம் எண்.2027 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி அலுவலகத்தில் மேலாளருக்கு தனியறை இல்லாத காரணத்தால், அலுவலக கோப்புகள் மற்றும் ஆவணங்களை பாதுகாப்பாக வைப்பதற்கும், பொது பிரச்சனைகளின் நிமித்தம் அலுவலகத்திற்கு வருகை புரியும் பொது மக்களை சந்திப்பதற்கும், அரசுப்பணி தொடர்பாக அலுவலகத்திற்கு வருகை புரியும் பிற அரசுதுறை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு சிரமம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டும், அலுவலக பொதுப்பிரிவில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள அறையினை மேலாளருக்கான தனியறையாக மாற்றியமைத்து, கணணி மற்றும் குளிர்சாதன

வசதிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,25,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.335-1/2019/இ1

**தீர்மானம் எண்.2028 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோக பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான 4 எண்ணம் பணியாளர்களை 356 நாட்களுக்கு தினக்கூலி பணியாளர்களாக ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துவதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.5,70,000/-க்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.1995 நாள் 18.02.2019-ன் மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் 06.03.2019 அன்று ஒப்பந்தப்புள்ள கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | திரு.சி.செல்லநாடார் | மதிப்பீட்டை விட 1.00 % அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.சி.சந்திரசேகர், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.174-1/2019/இ1

**தீர்மானம் எண்.2029 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.ஜாண் என்பவர் எடுத்துள்ள பணிகள் அனைத்தும் முடிவு பெற்று பின்னர் பட்டியல் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் அனைத்தும் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் ரூ.54518/- உள்ளதால், மனுதாரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1199/2018/பி1

**தீர்மானம் எண்.2030 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.9**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ள DBC பணியாளர்கள் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியமர்த்த ஜனவரி 2019 முதல் மார்ச் 2019 வரை 89 நாட்களுக்கு இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1962 நாள் 31.12.2018-ல் ஒப்புதல் பெற்று பணியமர்த்தப்பட்டது. மேலும் 17 DBC பணியாளர்களை ஏப்ரல் 2019 முதல் ஜூன் 2019 வரை 89 நாட்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/194/2016 நாள் 11.02.2018-ல் தெரிவித்துள்ள தினக்கூலி பட்டியலின்படி 89 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.380000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.2031 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.10**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவுகள் அகற்ற பயன்படுத்தப்படும் வாகனங்கள் தகுதி சான்று பெற பழுதுகள் சரி செய்ய பணிமனையில் விடும் போது நகரப்பகுதிகளில் திடக்கழிவுகள் அகற்றுவதில் சிரமம் ஏற்படுவதால் திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்குவதில் குறைபாடுகள் ஏற்படுவதாலும் வாகனங்கள் பணிமனையில் நிற்கும் காலம் மட்டும் Govt.Agro Engineering Society மூலம் வாகனங்கள் வாடகைக்கு எடுத்து திடக்கழிவுகளை அகற்ற உத்தேச செலவுத் தொகை ரூ.250000/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.334/2017/எச்1

**தீர்மானம் எண்.2032 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சியில் 2017-18-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1921/2002/சி1

**தீர்மானம் எண்.2033 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.12**

தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழைகளுக்கு விவசாய தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஒருமுறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/- வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளை தேர்வு செய்யும் விண்ணப்ப படிவங்கள்

அச்சிட்ட வகையில் ரூ.11250/- மற்றும் விண்ணப்ப படிவங்கள் வெளியில் கொடுத்து கணணியில் பதிவேற்றம் செய்த வகையில் ரூ.8190/- ஆக மொத்தம் ரூ.19440/-க்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.278/2019/எச்1

**தீர்மானம் எண்.2034 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.13**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு 2019-20-ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் Schedule of rate இந்நாள் வரையிலும் பெறப்படாத காரணத்தால் பொதுமக்கள் நலன் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கீழ்க்காணும் பொருள்களுக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பொருட்களின் விபரம் | யூனிட் | 15mm விட்டம் | 20mm விட்டம் |
|---|---|---|---|---|
| 1 | G.I Pipe | m | 127.05 | 155.92 |
| 2 | G.I Bend | No | 41.58 | 60.06 |
| 3 | G.I Elbow | No | 30.03 | 40.42 |
| 4 | G.I Coupling | No | 25.41 | 28.87 |
| 5 | G.I reducer | No | 32.34 | 57.75 |
| 6 | G.I Union | No | 75.07 | 90.09 |
| 7 | G.M. Ferrule | No | 418.11 | 627.16 |
| 8 | Brass tap | No | 231.00 | 231.00 |
| 9 | Water meter | No | 1819.12 | 2125.20 |
| 10 | main coch | No | 237.93 | 294.52 |
| 11 | Ferrule cap | No | 57.75 | 115.50 |
| 12 | Saddle pice 90 mm x 15mm | No | 146.68 | 231.00 |
| 13 | Stop coch | No | 198.66 | 265.65 |
| 14 | G.I Nipple | No | 40.42 | 45.04 |
| 15 | Pipe Nipple | No | 57.75 | 86.62 |
| 16 | Flow control valve | No | 346.50 | 693.00 |
| 17 | Brass screw down pipe coche | No | 363.82 | 545.16 |
| 18 | wheel valve | No | 289.90 | 396.16 |
| 19 | M.S clamp | No | 11.55 | 23.10 |
| 20 | G.I pipe laying | m | 12.60 | 12.60 |
| 21 | G.I pipe மரை போடுதல் | m | 8.40 | 8.40 |
| 22 | பெருல், சாடில், யூனியன் பொருத்துதல் | No | 15.75 | 15.75 |
| 23 | மீட்டர் பொருத்துதல் | No | 48.30 | 48.30 |
| 24 | மண் தோண்டுதல் | m | 174.93 | 174.93 |
| 25 | மேற்பார்வை கட்டணம் மொத்த வகையில் 20 % குறைந்த பட்ச தொகை | | | |

மேலும் குடிநீர் இணைப்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்திட 2019-2020-ம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | | 15mm | 20 mm |
|---|---|---|---|
| 1 | சிமெண்ட் தளம் | 671.26 | 812.54 |
| 2 | தார் தளம் | 515.13 | 636.40 |
| 3 | மண் தரை | 182.17 | 303.18 |

மேலும் குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு, மறு இணைப்பு கட்டணம் 2019-2020-ம் ஆண்டிற்கு ரூ.300/- வீதம் வசூல் செய்திடவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட விலை விகிதத்தின் படி 2019-2020-ம் ஆண்டிற்கு மதிப்பீடு தயார் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/7063/2011

## தீர்மானம் எண்.2035 அங்கீகரிக்கப்பட்டது

## பொருள் எண்.14

**2019 ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உபவிதிகள்**

நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களது அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.44555/2013/P3 நாள் 28.02.2019-ன் படியும் 2019 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச் ) சட்டம் 12 ன் படியும் (No.of 2019 Tamil Nadu Municipal Laws( Second Amendment) Act 2019 Published in Tamil Nadu Government Gazette Extraordinary No.75 dt 21/02/2019) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுப்புறசூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண்.84 நாள் 25.06.2018-ன் படியும் தமிழக நகராட்சி பகுதிகளில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்ததன் அடிப்படையில் துணை விதிகள் ஏற்படுத்தியோ அல்லது ஏற்கனவே இயற்றப்பட்ட துணைவிதிகளில் திருத்தங்கள மேற்கொண்டு அரசிதழில் வெளியிட தெரிவித்துள்ளதன் அடிப்படையில் குளச்சல் நகராட்சி ப்குதியில் ஒருதடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல் கொண்டு செய்தல், விற்பனை செய்தல் பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்தும் ஏற்கனவே இயற்றப்பட்ட குளச்சல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 (கன்னியாகுமரி மாவட்ட அரசிகழ் எண். 1 நாள் 16.03.2018 ) இல் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யவும் அதனை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு குளச்சல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிக்கான திருத்தங்கள்

| | | | |
|---|---|---|---|
| 3 ம் பிரிவிற்கான திருத்தங்கள் | 1 | | 2016 ஆம் ஆண்டு குளச்சல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 3 ஆம் பிரிவில் (22) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | 23 | செயலாக்க அதிகாரி : நகராட்சிப் பகுதிகளில் செயலாக்க அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார். |
| | | 24 | ஆய்வு நடத்தி தண்டம் வசூல் செய்யும் அதிகாரி : ஆய்வு செய்து தண்டம் வசூல் செய்யும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு ஆய்வாளர், துப்புரவு அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரிமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவார். |
| | | 25 | மேல்முறையீட்டு அலுவலர் : இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துக்களில் மேல் முறையீட்டு அலுவலர் நகராட்சி ஆணையாளரே ஆவார். |
| | | 26 | தண்டனைகள் விதிக்கும் முறைகள் :<br>இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல்முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2 ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot fine) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவருக்கு கூடுதல் தொடர் அபராதத்துடன் உடனடியாக குடிநீர் இணைப்பு துண்டித்தல் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் (D&O) இரத்து செய்யப்படும். |
| | | 27 | நெகிழி வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பயன்படுத்தப்படும் நிர்வாகங்கள் வகைப்பாடு<br>I. மொத்தமாக (Whole sale) மற்றும் சில்லறையாக சேமித்தல் / வழங்குதல் / கொண்டுசெல்லுதல் / விற்பனை செய்தல் / பயன்படுத்துதல் / பகிர்ந்தளித்தல்<br>II. வணிக வாளகங்கள், துணிக்கடைகள், பல்பொருள் அங்காடிகள், தீரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள், துணி தையல் நிறுவனங்கள், உணவு விடுதிகள், மதுபானம் விற்பனை நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், மருத்துவமனைகள், பெரிய வணிக நிறுவனங்கள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்<br>III. மளிகை கடைகள், அனைத்து வகையான மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள், டீ மற்றும் வடை விற்பனை கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள்<br>IV.சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக்கடைகள், தள்ளுவண்டி விற்பனையாளர்கள் மற்றும் இதர அனைத்து வகை வணிக நிறுவனங்கள்<br>V. அனைத்து வகையான அரசு நிறுவனங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகள். |
| 4 ம் பிரிவிற்கான திருத்தங்கள் | | II. | 2016 ஆம் ஆண்டு குளச்சல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4 ஆம் பிரிவில் (2) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறுகள் சேர்க்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2(1) | ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை (Irrespective Micron) தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவை தடை செய்யப்படுகின்றன. மீறினால் தடைசெய்யப்பட்ட பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டிவரும். |
| 6 ம் பிரிவிற்கான திருத்தங்கள் | | 3 | 2016 ஆம் ஆண்டு குளச்சல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 6 ஆம் பிரிவில் |
| | | | a) கூறு(2) நீக்கம் செய்யப்படுகிறது<br>b) கூறு(3) நீக்கம் செய்யப்படுகிறது<br>c) கூறு(4) நீக்கம் செய்யப்படுகிறது |
| 7 ம் பிரிவிற்கான திருத்தங்கள் | | 4 | 2016 ஆம் ஆண்டு குளச்சல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 7 ஆம் பிரிவில் |
| | | | a) கூறு (a) நீக்கம் செய்யப்படுகிறது |
| 8 ம் பிரிவிற்கான திருத்தங்கள் | | 5 | 2016 ஆம் ஆண்டு குளச்சல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 8 ஆம் பிரிவில் (8.3) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு சேர்க்கப்படும் |
| | | | 8.3 இந்த திருத்தப்பட்ட துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 90 நாட்கள் ஆகும். அதற்கு பிறகு இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை II ன் படி இந்த திருத்தப்பட்ட துணை விதிகளை மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். |
| | | | 8.4 அட்டவணை II –ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மவாட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி ஆணையாளர் அல்லது அவரது முழுஅதிகாரம் அளிக்கப்பட்ட நகராட்சி அதிகாரி மூலமாக சட்ட ரீதியான வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். |
| புது அட்டவணை II சேர்த்தல் | | | 2016 ஆம் ஆண்டு குளச்சல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் அபராத அட்டவணை 1 க்கு பின்வு அட்டவணை II சேர்க்கப்படும் |

**அட்டவணை II**

2016 ஆம் ஆண்டு குளச்சல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4 ஆம் பிரிவில் (2(1)) ஆம் கூறில் தெரிவிக்கப்பட்ட விதிகளை மீறினால் செலுத்தவேண்டிய அபராத தொகை

| வ. எண் | குற்றங்கள் | முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| i | ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய வகையிலான (irrespective Micron) நெகிழியை சேமித்தல், தயாரித்தல் வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 25000 | 50000 | 100000 |
| ii | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய வகையிலான வகையிலான (Irrespective Micron) நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 10000 | 15000 | 20000 |
| iii | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய வகையிலான வகையிலான (Irrespective Micron) நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 1000 | 2000 | 5000 |
| iv | சிறிய வணிக விற்பனையாளர்கள் மற்றும் தனியார் பயன்படுத்துபவர்களுக்கும் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்படக்கூடிய வகையிலான வகையிலான (Irrespective Micron) நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | 100 | 200 | 500 |

கோப்பு எண்.1360/2017/எச்1

**தீர்மானம் எண்.2036 அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண்.15**

இந்நகராட்சியில் வருவாய், மூலதனநிதி மற்றும் குடிநீர் வடிகால் நிதி கணக்குகளுக்கு 2019-2020-ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.449/2018/பி1

**தீர்மானம் எண்.2037 அங்கீகரிக்கப்பட்டது**